
மாத இதழ்

# சுட்டி

1 செப்' 83
50 காசு

31




ஈழத்தமிழர்-தீர்வு

உள்ளே...


மீண்டும் ஒரு சுதேசி இயக்கம்

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011



YOUR TRUSTED TRAVEL AGENT
For Fast and Friendly Service

**Ganesh Overseas Travel & Tours**



Your Reliable Tourist Car Operator
For Timeless Service

**Aruraj Cabs**

217, First Floor, Khaleel Shirazi Estate,
Pantheon Road, Egmore, Madras-600 008.

Cables : GANESHTOUR Tel : 810256

**Your Safety Is Our Concern**


FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011



இறக்குமதி செய்யப்பட்ட இந்த மெர்ஸிடைஸ்—SEL 500 சொகுசுக்காரின் விலை ரூ 8.56 லட்சம். இது பிரபல திரைப்பட நடிகருக்கோ பெரிய தொழிலதிபருக்கோ சொந்தமானதல்ல; ஒரு சாமியாருடையது. அவர் வேறுயாருமல்ல; நமது பிரதமரின் குடும்ப நண்பராயிருந்த தீரேந்திர பிரம்மச்சாரியார் தான்!

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

நமது சமூக நீதிகளையும் வாழ்வுமுறைகளையும் சாதி அடிப்படையில் வகுத்துக்கொள்ளச் சாத்திரம் இடம் தருமானால் அது "சதி" என்றார் பாரதி. சாத்திரச் சாதி நமது மகான்களாலும் ஞானிகளாலும் வகுக்கப்பட்டது. பண்டிதர்களால் விளக்கப்பட்டது, அதிகாரத்தால் நிலைநாட்டப்பட்டது.

சட்டச் சாதி நமது அரசியல் வாதிகளாலும் நிர்வாகிகளாலும் வகுக்கப்படுகிறது, வக்கீல்களால் விளக்கப்படுகிறது, கிராமிய அதிகாரிகளால் நிலைநாட்டப்படுகிறது.

# ச(ா)திகள்



சாத்திரத்தைச் சாடிய பெரியார் ராமசாமி சட்டத்தையும் எரிக்கத் துணிந்தார். காலப் போக்கில் சாத்திரப் பேய் வலு விழக்கவே, சாதிப் பிசாசு சட்டத்தைப் பற்றிக்கொண்டது. 'சாதிப் பிரிவினை ஒழிக, ஆனால் சாதிப் பங்கீடு வாழ்க' என்பது பெரியாரியமாகிவிட்டது.

சாதி உணர்வு ஓர் இந்தியத் தன்மை! மொழி, மதம் என்கிற பற்றுகளால் நாடு என்கிற பந்தத்திற்குப் பாதகம் விளையாதிருக்கும் முதிர்ந்த நாகரிகத்தைக் கற்றுக்கொள்ள எப்படித் திணறுகிறோமோ, அது போல் சாதியும் ஒரு தவிர்க்க முடியாத, ஆனால் தவிர்க்க வேண்டிய, இந்தியத் தன்மை! ஏனைய இரண்டினையும் விட அசிங்கமானது என்னவென்றால், இதை அறவே நிராகரிப்பதாக வெளிப் பார்வைக்கு முழங்கிக் கொண்டே, லாவகமாக முடுக்கிவிட்டு பிழைப்பு நடத்துவதுதான்! சாதி அபிமானத்தால் நேரடியாகச் செயலாற்றுபவர்களைவிட இந்தப் போலித்தனத்தால் பொது வாழ்வில் ஈடுபட்டுச் சொந்த லாபம் தேடுபவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள்.

பாரதி நினைவு நாள், பெரியார் பிறந்த நாள், என்று செப்டம்பரிலும் பெரியார் நினைவு நாள், பாரதி பிறந்த நாள் என்று டிசம்பரிலும் கொண்டாடப்படும் சடங்குகளின் போது இந்தச் சதிகாரர்களை இனம் கண்டு கொள்வோம்.

—எழிலமுதன்

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

# ஈழத்தமிழர்-தீர்வு



இலங்கை மக்கள் தொகையில் கணிசமான பங்கினர் தமிழர். அதாவது முப்பத்தைந்து இலட்சம் பேர். இவர்களுள் மலைத் தோட்டத் தொழிலாளர்கள் ஆங்கில ஆதிக்க காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து குடியேறிய தமிழர்கள்-பத்து இலட்சம் பேர். எஞ்சிய தமிழர் அனைவரும் இலங்கை மண்ணின் மைந்தர்கள். வெட்டாசு (Veddas) என்று அழைக்கப் படும். 'ஆஸ்ட்ராயிட்' என்ற திராவிட இனத்தின் மூலமக்கள் இலங்கையில் வாழ்ந்தனர்; அவர்கள் வழியினரே இலங்கைத் தமிழரும்—இந்தியத் தமிழரும் என்பது மானுடவியல் ஆய்வுச் செய்தி.

சிங்கள வரலாற்றைக் கூறும் சிங்களச் சாாபு நூலாகிய கோவசத்தின் படி எல்லாளன் என்ற தமிழரசன், இலங்கையை கி.மு. 161-117 வரை ஆண்டான். அவனைத் தொடர்ந்து தமிழரசர்களும், சிங்கள அரசர்களும் இலங்கையை மாறி, மாறி ஆண்டனர். எனினும், வடக்கு, கிழக்கு, வடமேற்கு இலங்கைப் பகுதிகள், என்றும் தமிழராலேயே ஆளப்பட்டன போர்த்துக்கீசியர்களும், ஹாலந்துக் காரர்களும் இலங்கையை கைப்பற்றிய போது (கி.பி. 17-ஆம் நூற்.) தமிழ்ப் பகுதியைத் தனியாகவே ஆண்டனர். பின்பு பிரிட்டிசார் கைவசம் இலங்கை வந்த போது தான் ஈழத் தமிழக அரசுகள் சிங்கள அரசுகளுடன் ஒன்றாக்கப் பட்டன. 1948-இல் விடுதலை நல்கும்போதும் பிரிட்டிசார் ஒரே நாடாக, இலங்கையைச் சுதந்திர நாடாக நல்கினர். சுதந்திரம் பெறும் போது மிகுந்த செல்வாக்குடன் அன்றிருந்த தமிழினத் தலைவர் சர். பொன்னம்பலம், இராமநாதன் போன்றவர்கள் பின்வரும் எதிர்கால விளைவுகளை எண்ணிப் பாராமல் அப்படியே சுதந்திரத்திற்கு ஒப்புக் கொண்டனர்.

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

1947-இல் இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்துவிட்ட நிகழ்ச்சியும், பெல்ஜியம், கனடா போன்ற நாடுகளில் சகல உரிமையும் வாய்ந்த 'பெடரல்' அமைப்புகள் அமைந்துவிட்டிருந்த நிகழ்வுகளையும் பாராமல், தனி நாடோ, கேவலம் ஒரு தனி மாநிலமோ கூடக் கேட்காமல் 1948ல் தமிழ் தலைவர்கள் ஏமாந்தனர். மொழி, இன, மத அடிப்படைகளில் முற்றுமாக வேறுபட்டிருந்த தமிழர் எப்படி ஏமாந்தனரோ!

1948-இல் சுதந்திரம் பெற்ற இலங்கை 1949-லேயே மலைத் தோட்டத் தொழிலாளர்களை ஓட்டுரிமை, குடியுரிமை எதுவும் இல்லாத நாடற்றவர்களாக அறிவித்தது சிங்கள அரசு. அன்றையத் தமிழினத் தலைவர்கள் இது பற்றி பெரிதாக ஒன்றும் அலட்டிக் கொள்ளவில்லை. தொலை நோக்கு இன்மையால் பத்து இலட்சம் தமிழ் ஓட்டுகளைத் தமிழர்கள் நிரந்தரமாக இழந்தனர். இலங்கை மண்ணின் இனமாகிய தமிழினம், 'மைனாரிடி' இனமாகச் சிறுத்தது. சிங்கள அரசியல் வாதிகள் மெல்ல மெல்லத் திட்டமிட்டு தமிழரை அரசியல், சமூக பொருளாதார, மொழி அனைத் தளவிலும் இரண்டாந்தர குடிமக்களாக்குவதில் வெற்றி பெற்றார்கள்.

- ☐ 1956-இல் நடந்த முதல் இனக் கலவரம் 1975 வரை நடந்த பல முனைத் தாக்குதல்களில் சிங்கள மக்கள் மட்டுமே ஈடுபட்டு வந்தனர்.
- ☐ 1977-இல் சிங்களப் பொது மக்களுடன் சிங்களப் போலீசும் சேர்ந்து கொண்டது.
- ☐ 1981-இல் சிங்களப் பொது மக்கள், சிங்களப் போலீஸ் இவர்களுடன் சிங்களர் இராணுவமும் சேர்ந்து இணைந்தது.
- ☐ 1983-இல் ஜூலை 23-க்குப் பிறகு நடக்கும் கலவரத்தில் சிங்களப் பொது மக்கள், போலீஸ், இராணுவம், சிங்கள அரசு அனைத்தும் ஒருங்கேச் சேர்ந்து தமிழர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறது.

இலங்கையின் 'தமிழ்ப் புலி' என்ற தீவிரக் கூட்டம் 1978 வரை தோன்றவேயில்லை. தமிழர்கள் கல்வி, வேலை வாய்ப்பு, மொழிச் சமத்துவம் போன்ற அடிப்படைத் தேவைகளில் கூட புறக்கணிக்கப் பட்டார்கள். அதன் பிறகே

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

தீவிர வாதம் தோன்றத் தொடங்கியது. 'பிரிவினை வழி' என்ற நிலைக்கு அவர்கள், சுதந்திரம் கிடைத்து 30 ஆண்டுகளுக்குப் பிறகு தள்ளப்பட்டார்கள். 'பிரிவினை' என்று கூறுவது கூடச் சரியில்லை. **தங்கள் பூர்வீக நாட்டைப் பூர்வீக குடிகள் கேட்கிறார்கள்.** அவ்வளவே! எனவே இது ஒரு விடுதலைப் போர்.

1948—1983 உள்ளிட்ட 35 ஆண்டுகளில் அண்டை நாட்டில், இந்திய இனத்தமிழர்கள் எல்லா வகையிலும் ஒடுக்கப்பட்ட காலங்களில், தமிழ் நாட்டு அரசுகளும், இந்திய அரசும் எதனையும் கண்டு கொள்ளவே இல்லை. 1967-க்குப் பிறகு தமிழக அரசுப் பொறுப்பேற்ற கட்சிகள் 'கண்டு கொள்வது' போலக் காட்டிக் கொண்டாலும் உள் நாட்டு அரசியல் இலாபமே அக்கட்சிகளுக்கு உள் நோக்கமாக இருந்தது, இருக்கின்றது.

இன்றைய இலங்கைத் தமிழர் சிக்கலுக்குத் தீர்வு தான் என்ன?

- ☐ கனடாவில், பிரெஞ்சு மக்களுக்கென தனி நாடாளுமன்றம், முதலமைச்சர் முதலானவை இருப்பது போல ஒரு பெடரல் அமைப்பை இலங்கை என்ற ஒரு நாட்டிற்குள்ளாகவே அமைத்துக் கொடுப்பது,
- ☐ டான்சானியா, ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளில் சுழற்சி முறையில், ஒவ்வொரு இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஆட்சித் தலைமையை ஏற்க சம வாய்ப்பு வழங்க சட்டத்தில் இடம் உள்ளது. இது போல தமிழர், சிங்களர் மாறி, மாறி அரசியல் தலைமை பெற சட்டமியற்ற வேண்டும்.
- ☐ தமிழர் வாழும் வடக்கு, கிழக்கு, வடமேர்குப் பகுதிகளை உள்ளடக்கிய ஈழத் தனி நாட்டைப் பெற்றே தீருவது.

இவற்றுள், மூன்றாவதான ஈழத் தனி நாடு என்பதுதான் நிரந்தரமான தீர்வு. ஈழத் தமிழ்மாநிலம் என்பது தற்காலிகத் தீர்வு. இந்த இரண்டுள் ஏதேனும் ஒன்றையேனும் பெற்றுத் தர தமிழக அரசுக்கோ, தமிழக அரசியல் கட்சிகளுக்கோ, தலைமை அமைச்சர் இந்திராவிற்கோ துப்பில்லை என்றால் பேசாமல் 'நரி' வேடம் போட்டுக்கொண்டு அடங்கிக் கிடப்பதே நல்லது.

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

இலங்கைத் தமிழர் பிரச்சனையை ஒரு வெளிநாட்டு பிரச்சனையே என இன்னும் பேசுவது ஒரு 'மொட்டை' வாதம்!

பங்களாதேசம், ஆப்கானிஸ்தான், சைப்ரஸ், இசுரேல், பாலஸ்தீனம், கோவா முதலான நாடுகளில் மொழி, இனப் பிரச்சனைகள் வந்த போதெல்லாம் 'அவை வெளிநாட்டுப் பிரச்சினை' என்று விடப்படவில்லை. வங்க மக்கள் பிரச்சினையை ஒரு தேசியப் பிரச்சினையாக்கி, இந்திய, அனைத்து மாநில அரசியல், பொருளியல், சக்திகளையும் ஒருமுகப்படுத்தி, வங்க தேசத்தை விடுதலை ஆக்கியது— இந்திரா அரசு.

ஒரே இரவில் (1968) போர்த்துகீசிய கோவாவை இந்திய இராணுவம் இழுத்துச் சேர்த்துக் கொண்டது.

இந்த வெளிநாட்டுப் பிரச்சனைகள் எல்லாம் தில்லி அரசிற்கு உள்நாட்டுப் பிரச்சனைகளாகவே இருந்தன. ஆனால் இலங்கைப் படுகொலைப் பிரச்சினை மட்டும் அவசரமற்ற பிரச்சினை என்று காட்டப்படுகிறது! காரணம்: இது தமிழன் தொடர்பான பிரச்சினைதானே என்று நினைப்பது தானோ!

—"அறம்"

---

தாய்மொழியான இந்தியில் மட்டுமல்லாமல் வடமொழி பாலி பிராக்ருதம், அப்பிரன்சம், பாரசீகம், ஆங்கிலம் திபேத், சீன, ரஷ்ய மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார்.

மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியராக 15 ஆண்டுகள் பணி புரிந்து தனது மேதா விலாசத்தை ரஷ்ய மண்ணிலும் விதைத்தார்.

பாமரர்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் எளிய நடையில் மதம், இலக்கியம், தத்துவம் விஞ்ஞானம் போன்ற பல துறைகளைப் பற்றியும் பல நூல்களை எழுதிய இவர் இலக்கியத் தோட்டத்தில் என்றும் மணம் பரப்பிக் கொண்டிருப்பார்.

—"கார்த்திக்"

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

நாம் அறிய வேண்டியவர்கள் :

# இலக்கியச்செம்மல் ராகுல்ஜி



'ராகுல்ஜீ' என அழைக்கப்படும் ராகுல் சாங்கிருத்யாயன் 1893-ஆம் ஆண்டில் பிறந்தார். சிந்தனைத் திறமையையும், இலக்கியப் புலமையையும் மக்களின் பகுத்தறிவு வளர்ச்சிக்கு உரமாக இட்டார். இவரது 'வால்காவிலிருந்து கங்கை வரை' ஓர் அமர காவியம். இவரது சுயசரிதை ஒவ்வொரு தனி மனிதனுக்கும் தன்னம்பிக்கையூட்டும் உணர்வு கொண்டவை.

உலகம் முழுவதும் பயணம் செய்து புத்தர் கால இந்தியாவையும், இன்றைய இந்தியாவையும் ஒப்பு நோக்கி ஆய்ந்ததின் மூலம் ஆசிய, ஐரோப்பிய நாடுகளில் இந்தியாவின் புகழைப் பரப்பச் செய்தார். தமது பணியை இலக்கியத் தொண்டோடு நிறுத்திக் கொண்டு விடாமல் தேச பக்தி உணர்வுடன் இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு பல ஆண்டுகள் சிறையில் வாடினார். பீகாரில் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு நிலப்பிரபுக்களுக்கு எதிராகப் போராடியதில் குண்டர்களால் தாக்கப்பட்டு கடும் துன்பத்திற்குள்ளானார்.

தன் விருப்பத்திற்கெதிராக பால்ய விவாஹம் செய்விக்கப்பட்டதை எதிர்த்து வீட்டை விட்டு வெளியேறி காசியிலும், பின்னர் தமிழகத்திலுள்ள திருமழிசையிலும் வடமொழி பயின்று புலமைத்துவம் பெற்றார்.

சிறை வாழ்க்கையின் போது மார்க்சிய வாதிகளால் ஈர்க்கப்பட்ட இவர் தன் முந்தைய மத சம்பந்தமான ஞானம், வேதாந்த அறிவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கலை, இலக்கியம், வேதாந்தம், தத்துவம் ஆகிய எல்லா துறைகளிலும் புதிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அவற்றை மார்க்சிய கண்ணோட்டத்தில் எழுதி மார்க்சியத்திற்குப் புதிய வளமும், மெருகும் சேர்த்தார்.

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

நமது

# மிளகாய் மருத்துவம்



மிளகாய் சமீப நூற்றாண்டுகளில் தான் நம் நாட்டிற்கு அறிமுகமானது. நம் முன்னோர்கள் மிளகாய் காரத்தை உபயோகித்ததே இல்லை. காரத்திற்கு மிளகே பயன்பட்டது. மிளகு போன்று காரமுடையதாக இருந்ததால் இது மிளகாய் என அழைக்கப்பட்டது.

☐ **காயம் ஆற :** மிளகாய், உப்பு சர்எடை தூள் செய்க. இதனை வேப்பெண்ணையில் வதக்கிக் கட்டுக. குண மாகும்.

☐ **தலைவலி தீர :** மிளகாய், மிளகு, செம்மண், சம அளவு எடுத்து தண்ணீர் விட்டு மை போல் அரைத்துக் கொதிக்க வைத்து இளஞ் சூடாகப் பற்றுப் போடுக.

☐ **மூன் சைநத்த வலி நீங்க :** மிளகாய், உப்பு, சரி அளவு எடுத்து நல்லெண்ணெயில் போட்டு நன்றாக வதக்கி கொண்டு ஒத்தடம் கொடுத்தால் வலி தீரும்.

☐ **வயிற்று வலி தீர :** உஷ்ணத்தினால் வயிறு வலித்தால், ஒரு மிளகாயைக் கிள்ளி அதன் விதைகளை வாயில் போட்டுக் கொண்டு. கொஞ்சம் தண்ணீர் குடிக்க வலி தீரும்.

☐ **காது வலி போக :** கொஞ்சம் நல்லெண்ணையை ஒரு சிறிய கரண்டியில் ஊற்றி அதில் மிளகாயைக் கிள்ளிப் போட்டுச் சூடேற்றி நன்றாகச் சிவந்தவுடன் அந்த எண்ணெயில் பொறுக்கும் சூட்டுடன் சில துளிகள் காதில் விட்டு, பஞ்சினால் அடைத்து வைக்க குணமாகும்.

☐ **நரம்புச் சிலந்திக்கு :** மிளகாயை நன்றாக அரைத்து வைத்துக் கட்டவும். காலை, மாலை இவ்விதம் செய்ய நரம்பு அறுந்துவிழும். எரிச்சலும் இராது. பயப்பட வேண்டாம்.

—சித்தன்

(அடுத்து : நமது சுண்ணாம்பு மருத்துவம்)

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

# இந்திய அரசின் கொத்தடிமைகள்

'சிறைச் சாலைகளில் வேலை செய்யும் கைதிகளுக்கு நாள் தோறும் எட்டு ரூபாய் கொடுக்க வேண்டும்' என்று கேரள நீதி மன்றம் அளித்திருந்த தீர்ப்பை, கேரள மாநிலத்தின் உள்துறை அமைச்சரான வயலார் ரவி கேலியாக விமர்சித்திருக்கிறார்.

"கைதிகளுக்கு சிறைச்சாலைகளை லாபகரமான இடமாக மாற்ற, நீதி மன்றங்கள் முயலுகின்றன; தபால் கார்டுகளைக் கூட புகார்களாக ஏற்றுக் கொண்டு அரசின் அன்றாட அலுவல்களில் நீதி மன்றங்கள் தலையிடுகின்றன." என்று கண்டித்திருக்கிறார்.

உழைக்கும் சிறைக் கைதிகளின் ஊதியம் பற்றிய நீதி மன்றத்தின் ஆணையைக் குறித்து அரசு இது வரை எந்தக் கருத்தையும் வெளியிட வில்லை. எனவே தான், 'கேரள மாநிலத்தின் தலைமை நீதிபதி திரு. சுப்பிரமணியம் போட்டி அவர்கள் சிறை சீர்திருத்தக் குழுவிலிருந்து ராஜினாமா செய்து விட்டார்' என்று ஆங்கில வார இதழான 'சன்டே' செய்தி வெளியிட்டு இருக்கிறது.

நாடு முழுவதும் உள்ள கொத்தடிமைகளை மீட்டு வருவதாக முழங்கி வரும் இந்திய அரசு, சிறைச் சாலையில் உழைக்கும் கைதிகளுக்கு நீதி மன்றம் நிர்ணயித்த ஊதியத்தை தர மறுப்பது நமக்கு வியப்பாக உள்ளது. குற்றம் செய்பவர்களுக்குத் தண்டனையாகத் தான் சிறை வாசம் அளிக்கப்படுகிறது. 'ஒரு கைதி சிறைக்குள் இருந்தாலே, அவன் தண்டனை அனுபவிக்கிறான்' என்று தான் பொருள். சிறையில் இருக்கும் கைதிகள் விடுதலையான பின் சிறையில் சேர்த்து வைத்த பணத்தைக் கொண்டு வியாபாரம் செய்து பிழைக்க வாய்ப்புண்டு. ஆகையால், அவர்களது உழைப்பை சுரண்டுவது அநாகரீகமான செயலாகும். உழைக்கும் கைதிகளுக்கு நீதி மன்றம் நிர்ணயித்த ஊதியத்தைக் கொடுப்பது தான் முறையானது. இல்லையெனில், அரசு 'கைதிகளை கொத்தடிமைகளாகத் தான் நடத்துகிறது' என்று மக்கள் நினைப்பார்கள்.

—G. மாதவராஜன்

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

# நட... நட... நட!



கிழவர் ஒருவர் நாள் தோறும் மாலையில் 2, 3 மைல் தூரம் நடந்து செல்வதை வழக்கமாகச் செய்து வந்தார். ஒரு நாள் மாணவன் ஒருவன் அவரைப் பார்த்துக் கேட்டான், "தாத்தா! எங்கே வேகம் வேகமாகப் போகிறீர்கள்" என்று.

"தம்பி! என்னுடைய ஆரோக்கியம் என்பது மூன்று மைலுக்கு அப்பால் இருக்கிறது, அதை எடுத்து வருவதற்காகத் தான் போகிறேன்." என்று பொருள் புரியப் பேசினார் கிழவர்.

உடற்பயிற்சிகள் மூன்று : நடத்தல், நீச்சல். யோகாசனம். இவற்றுள் நீச்சல் இளைஞர்க்கு. யோகாசனம் இளையோர், முதியோர்க்கு. நடத்தல் பயிற்சி அனைவருக்கும் ஏற்றது. ஆடவர், மகளிர், முதியோர் யாவரும் எந்த நேரத்திலும், எந்த நிலையிலும் செய்யத் தக்க உடற்பயிற்சி இது ஒன்றே!

வயது முதிர்ந்த கிழடுகள், கரு வாய்ந்த மகளிர், நடிகர்கள், சதை பெருத்து விட்ட மாமிச மலைகள், ஓய்வு பெற்ற முதியோர் இப்படி அனைத்துத் தரப்பினரும் கட்டாயம் மேற் கொள்ள வேண்டிய ஒரே பயிற்சி, நடை. (WALKING)

நடக்கும் போது ரத்த ஓட்டம் சீரான நிலை அடைகிறது. இருதயம் காக்கப் படுகிறது. நாள் தோறும் நடைப் பயிற்சியை ஒழுங்காகச் செய்து வருபவர்களுக்குத் திடீர் மாரடைப்பு (HEART ATTACK) வராது. ஏராளமான சிகரெட்டு, பீடிகளைப் புகைத்துத் தள்ளும் புகைஞர்கள் அந்தப் பழக்கத்தை நிறுத்த முடியாத நிலையில் கார்பன் மானாக்சைடிலிருந்து தப்ப இந்த நடைப் பயிற்சியே போதுமானது.

உடற்பயிற்சியினால் பசி எடுக்காது. ஆனால் நடைப் பயிற்சியினால் நல்ல பசி எடுக்கும். முதுமையின் வேகத்தை (AGING PROCESS) மெதுவாக்குவதற்கு நடையைத் தவிர வேறு வழியில்லை. நடை, இயற்கை அளித்த வரப்பிரசாதம்.

—கட்டி பாரதி

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

திரையுலகப் பிரமுகர்கள் 2

# நடிகர் எம்.ஜி.ஆர்.



(சென்ற இதழைப் படிக்காதவர்களும் படிக்கலாம்)

1957 இல் தி.மு.க சட்டமன்ற தேர்தல்களில் கலந்து கொண்டது. இந்தத் தேர்தலில் அதிகப்பட்ச இடங்களை எட்டிப் பிடிக்க கழகம் எல்லா உத்திகளையும் கையாண்டது.

இந்த நேரத்தில் கழகத் திரைப்பட நடிகரான எம்.ஜி.ஆரின் படங்கள் நல்ல வெற்றி பெற்று மக்களிடம் ஓரளவு செல்வாக்குப் பெறத் தொடங்கின. எனவே எம்.ஜி.ஆரின் திரைப்பட வெற்றியைக் கழகம் தனதாக்க முயன்றது. எம்.ஜி.ஆரும் கழகத்தைக் காட்டி தனது திரையுலக செல்வாக்கை மிகத் திறமையாக, மிகத் தந்திரமாக, திட்டமிட்டு அமைத்துக் கொண்டார்.

1957 தேர்தலில் தி.மு.க 15 சட்ட மன்ற இடங்களைக் கைப்பற்றியதில் எம்.ஜி.ஆர் மிகவும் பூரிப்படைந்திருக்கக் கூடும். 1953 இல் காங்கிரசிலிருந்து விலகி தி.மு.க வில் சேர்ந்தது மிகவும் லாபகரமான, சரியான முடிவு தான். இந்த தி.மு.க தேர்தல் வெற்றியையடுத்து, எம்.ஜி.ஆர் கழகத்தில் மிகப் பெரிய புள்ளியாக தன்னை வெளிப் படுத்தி கொள்ள முயற்சிகளைத் தொடர்ந்தார்,

தனது 20 ஆண்டு கால பழுத்த திரையனுபவத்தையும், மக்களைக் கூர்ந்து கவனித்துப் புரிந்து கொண்டதையும் வைத்து தானே சொந்தமாக "நாடோடி மன்னன்" என்ற படத்தை எடுத்தார். 1958 இல் வெளியான இப்படத்தை அவரே டைரக்டும் செய்து இரு வேடத்தில் நடித்தார். எம்.ஜி.ஆர் பிக்சர்ஸ் என்று அவர் புதிதாகத் தொடங்கிய படக்கம்பெனியின் முதல் படம் இது. இப்படத்தில் பகிரங்கமாக தி.மு.க வின் கழகக் கொடியை வண்ணத்தில் பறக்க விட்டுக் காட்டினார்.

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

இதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னால் அண்ணா எழுதிய "சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்" என்ற நாடகத்தில் எம். ஜீ. ராம்சந்தர் (பழைய சினிமா பெயர் இது தான்) சிவாஜியாக நடிப்பதாக திராவிட நாடு பத்திரிகையில் விளம்பரம் கூட வந்தது. திடீரென இந்நாடகத்தில் நடிக்க எம். ஜீ. ஆர் மறுத்து பின் வாங்கி விட்டார். இதில் நடித்தால் தனது கலையுலக முன்னேற்றத்திற்குப் பிரச்சனை ஏற்படும் என்று இவர் கருதியதே இந்தத் தயக்கத்துக்குக் காரணம். அண்ணா நாடகத்தில் நடிக்க பின் வாங்கியவர் அடுத்த சில ஆண்டுகளில் தேர்தல் முடிவுக்குப் பிறகு அண்ணாவின் கொடியைத் தன் படத்தில் காட்டியதும், மிகவும் வெளிப் படையாகவே, தி. மு. க மேடைகளில் பேசி வந்த கருத்துக்களை திரைப்பட வசனங்களாக மாற்றியதும், ஏன்? பச்சை ஆதாயங் கருதித் தானே!

இந்த சாதுரியமான படத் தயாரிப்பு முயற்சி அபார வெற்றி கண்டது. 25 வாரம் நாடோடி மன்னன் ஓடியது. தி. மு. க வில் எம். ஜீ. ஆருக்கு மிக உயர்ந்த இடத்தைத் தேடித் தந்தது.

இப்படி வெற்றியைப் பற்றி அண்ணா "அவர் பெற்ற புகழ் நாம் பெற்ற புகழாகும். நாம் பெற்ற புகழ் நாட்டுக்குச் சொந்தம் - நம் நாட்டின் தலை சிறந்த மகனாக அவரைக் கருதுகிறோம்" என்றார். கருணா நிதி "அண்ணா தம்பிகள் அனைவரும் வாழ்த்தப் பொன்னார் விளக்கெனப் புகழ் மலை ஏறினார்" என்று கவிதையால் புகழ்ந்து தள்ளினார். யாருக்கும் இது வரை நடந்தேறாத முறையில் மதுரையில் நான்கு குதிரைகள் பூட்டிய அலங்கார ரதத்தில் எம்.ஜீ.ஆரை அமர்த்தி, இப்படி வெற்றிக்கு கழக ஆதரவில் மாபெரும் ஊர்வலம் எடுத்தார்கள். சுமார் 2 லட்சம் பேர்கள் கூடிய கூட்டத்தில் நெடுஞ்செழியன், மதுரை முத்து பரிசளித்த தங்க வாளை அளித்து கௌரவித்தார்.

இந்த வெள்ளி விழா வெற்றிக்குப் பின்பு தான் எம். ஜீ. ஆர் புகழில் அசுரனாக வளரும் அடுத்த கட்டம் தொடர்கிறது. தி. மு. க விற்காக தொடக்க நாட்களிலிருந்து மேடையிலும், திரையிலும் நடித்து நடித்து கழகமே வாழ்க்கை என்றிருந்த நடிகர்கள் நடிப்பிசைப் புலவர்

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

கே. ஆர். ராமசாமி, நடிக மணி டி. வி. நாராயண சாமி கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், எஸ். எஸ். ஆர் போன்றோர் பின்னுக்குத் தள்ளப் பட்டு எம். ஜி. ஆரே கழகத்தின் ஆஸ்தான நடிகராக ஆக்கப்படுகிறார்.

தொடர்ந்து பாண்டு சட்டை போட்டு நடித்தாலும், அட்டைக் கத்தியுடன் ராஜவேஷத்தில் வந்தாலும், கதையில் பார்முலாவை எம். ஜி. ஆர் ஒரே மாதிரியாக கொண்டு செல்வதில் எச்சரிக்கையுடன் இருக்கிறார்.

1960 இல் பாக்தாத் திருடன், மன்னாதி மன்னன், ராஜா தேசிங்கு என்றால் 1961 இல் நல்லவன் வாழ்வான், சபாஷ் மாப்பிள்ளை, திருடாதே என்று புதிய கோப்பையில் பழைய மதுவே தொடர்ந்து போதையூட்டும்.



சினிமாவில் வரும் எம். ஜி. ஆருக்கும் நேரில் தோன்றும் எம். ஜி. ஆருக்கும் வித்தியாசமேயில்லை என்று லட்சக் கணக்கான பாமரர்களை நம்ப வைக்கும் செயல்களில் அவர் கவனம் செலுத்தினார். பலத்த விளம்பரத்துடன் பெரிய தொகையை வழங்குவார். எந்தக் கெட்ட பழக்கமும் தனக்கு இல்லையென்று மக்கள் நம்பும் படியாக நடந்து கொள்வார். தாய்ப் பாசம் பொங்குவது திரையில் மட்டுமல்ல, தாய்க் குலத்தை வேறு எங்காவது வேதனையில் கண்டாலும், திரைப் படத்தில் தோன்றியதை விட உருக்கமாகத் தழுவிக் கொள்வார். சிறப்பாக மக்கள் திரள் முன்பு இது மாதிரி 'ஸ்டன்டு'களை செய்வது 'ஸ்டன்ட்' நடிகரின் தனித் தன்மை.

எனவே எம். ஜி. ஆர் ஒரு இலட்சிய மனிதராக, தாய்ப் பாச மிக்க மகனாக, கொள்கை மறவனாக, ஒழுக்க சீலனாக இளம் பெண்களால் மிகவும் நேசிக்கப்படும் ஆண் மகனாக, நிழலுக்கும் நிஜத்திற்கும் வேறுபாடு தெரியாத லட்சக்கணக்கான அப்பாவி ஆண் பெண்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டார்.

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

## சத்துணவுத் திட்டம்

குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் 5 வயது முதல் 10 வயது வரையிலுமுள்ளவர்களுக்கும், குழந்தைகள் மையங்களில் 2 வயது முதல் 5 வயது வரையிலுமுள்ளவர்களுக்கும் மதிய உணவும் கல்வியும் அளிக்கப்படுகிறது. இவர்களெல்லாம் ,வறுமையில் வாடுகின்ற குடும்பத்தைச் சார்ந்தவர்கள்' என அரசு அறிவித்து உள்ளது.

எம். ஜி. ஆரின் சொந்த வாழ்க்கையோ, அரசியல் வாழ்க்கையோ திரையுலக வாழ்வோடு மிகவும் முரண்பட்டது என்பது தான் உண்மை!

ஆனால் நம் போதைக்குரிய பாமரர்கள், எந்த அளவிற்கு எம். ஜி. ஆரை நிஜமென்று நினைத்திருக்கிறார்களென்பதற்கு 1962 இல் வெளி வந்த "பாசம்" படம் சான்று.

இந்த சமூகப் படத்தில், எம். ஜி. ஆர் பட முடிவில் (ஒரு மாறுதல்) இறந்து போவதாக வருகிறது. எம். ஜி. ஆர் சாவை ரசிகர்களால் ஏற்கவோ, தாங்கவோ, முடியவில்லை- சென்னை பாரகன் தியேட்டரில் படம் வெளியான போது, இந்தச் சோக முடிவை ஏற்க மறுத்த ரசிகர்கள் திரைப்படம் ஓடும் திரையைக் கிழித்து, நாற்காலிகளைத் சேதப் படுத்தி நாசம் விளைவித்திருக்கிறார்கள். படம் தமிழகம் எங்கும் ரசிகர்களின் எரிச்சலுக்கு உள்ளாகி படு தோல்வியடைந்தது.

இதற்கு சில ஆண்டு கட்கு முன்பு வந்த "வீர பாண்டிய கட்ட பொம்மனில்" சிவாஜி தூக்கில் போடப்பட்ட சோக முடிவைக் கண்டும் மக்கள் அப்படத்திற்குப் பேராதரவுகொடுத்தார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. இப்படத்தைக் கண்ட சில எம். ஜி. ஆர் ரசிகர்கள்: "நம்ம வாத்தியார் நடித்திருந்தால் இப்படி தூக்கில் போடும் வரை சும்மா விடுவாரா, வெள்ளைக் காரனைச் சீவி விட்டு தப்பி வந்திருப்பார்" எனப்பேசிக் கொண்டதைக் கேட்டதாக ஒரு முக்கிய பிரமுகர் எழுதுகிறார்.

—(தொடரும்)

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

அப்படியே வைத்துக் கொள்வோம் எனில், உயர் நிலை பள்ளிகளிலும், மேல் நிலைப் பள்ளிகளிலும் பயில்கின்ற மாணவர்கள் எல்லோரும் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவர்களா? இவர்களில் எவருமே வறுமையில் வாடுகின்ற குடும்பத்தைச் சார்ந்தவர்கள் இல்லையா?

குழந்தைகளுக்கு சிந்தனையும், கல்வியும் வளருவதற்கு உணவும், கல்வியும் அளிக்கின்ற நமது அரசு, உயர் கல்வி பயில்கின்ற ஏழை மாணவர்களுக்கும் உணவளிக்க முன் வரக் கூடாதா? ஓரளவு சிந்தனை வளர்ச்சி பெற்று மேல் வகுப்பில் பயில்கின்ற எண்ணற்ற ஏழை மாணவர்கள் மதிய உணவிற்குத் தவிக்கும் நிலை பரிதாபத்திற்குரியது/அல்/ மதிய உணவிற்காக வாடும் நிலை பரிதாபத்திற்குரியது. இவர்களுக்கு எவ்வளவோ பிரச்சனைகள் இருக்கின்றன— எனினும், அவைகளில் முக்கியமான ஒன்று உணவு பிரச்சனையேயாகும். இது மாணவர்களின் கல்வித் தரத்தை வெகுவாகப் பாதிக்கிறது.



காலையில் கஞ்சியையோ, கூழையோ வாயில் ஊற்றிக் கொண்டு பள்ளிக்குச் செல்லும் ஏழை மாணவனுக்கு மதிய உணவு இல்லையெனில், வகுப்பறையில் அவனால் பாடம் கவனிக்க இயலுமா?

'தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்' என்ற பாரதிக்கு புகழாரம் சூட்டிய இந்த அரசு.

எத்தனையோ திட்டங்களுக்கு உபரியாகச் செலவு செய்து வரும் நமது அரசு, மேல் நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற ஏழை மாணவர்களுக்கும் ஒரு வேளை உணவு கிடைக்க வகை செய்வது நல்லது. அரசு முன் வருமா?

"—அ. சேகர்"

"வாசகர் குமுறல்" அடுத்த இதழில் தொடர்ந்து வெளிவரும்!

—ஆசிரியர்

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

## அஞ்சலி!

தேசிய கீதத்தின் போது
நாங்கள்
மௌனமாய்
எழுந்து நிற்பது
மரியாதைக் கல்ல—
அது
மரித்துப்போன
தர்ம தேவதைக்கு
தரப்படுகிற
அஞ்சலி!

—மத்திய சிறை (வேலூர்)
மலையமான



## பகிர்வு

எங்கள் வியர்வை விந்து
உங்கள் நெல்லின் கருக்கள்
உழைப்பால் உலர்ந்த
எங்கள் வயிறு
முதுகைத் தொட—
கொழுப்பால் குலுங்கும்
உங்கள் வயிறு
பிதுங்கி வழிய—
பாகம் பிரித்தீர்!
நெல் உங்களுக்கும்
புல் எங்களுக்குமாய்!

—M. A. ஸ்ரீராம

## வெள்ளெலிகளும் பெருச்சாளிகளும்

வெள்ளெலிகளை
விரட்டிடவே
வீறாப்பு காட்டி நின்றோம்
உள்ளிருந்த
பெருச்சாளிகள்
நம் கண்ணில்
படவேயில்லை
அவைகள்—
சுதந்திரச்
சோற்றுக் கட்டுக்குள்
சொகுசாய்
மறைந்து கொண்டன.

—சுதா முருகேசன்
(நெருடல் கையெழுத்து இதழ்)





## ஈழத்தமிழா!

ஈழத்தமிழா!
இலங்கையை வெல்வதற்கு
என்ன காரியம்
செய்தாய் நீ...?
ஏனிந்த பிழை புரிந்தாய்?
பாட்டன் பூமி
பக்கத்தில் இருக்கிறது.
கூப்பிட்ட குரலுக்கு
உன் கூட்டம் வந்துவிடும்
என்றா
குதித்து விட்டாய்
குருதிப் போர்க்களத்தில்?

''விடியல்'' இலக்கிய அமைப்பும்
''நாங்கள்'' கூட்டமைப்பும்
பம்மலில் இணைந்து நடத்திய
கவியரங்கில்
''சீதையின் மைந்தன்'' பாடியது.

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

# நினைச்சது ஒண்ணு!

சிறு கதை

சாவி மார்க் தீப்பெட்டிக் கம்பெனியின் வராந்தாவில் சிறுவர்களும், பெரியவர்களுமாய் உட்கார்ந்து மருந்து குச்சிகளைச் சட்டத்திற்குள் அடக்கிக் கொண்டிருந்தனர்.

"என்னடா 'போஸ்ட் பாக்ஸ்'... எத்தனை ப்ரேம் போட்டே?" ரெண்டு மாசமா இந்த கிழிசல் டவுசரைப் போட்டுக் கிட்டு வர்றியே, புதுசா ஒண்ணு தைச்சிக்கக் கூடாது?—கிண்டலாக சுந்தரத்திடம் கேட்டான் ரங்கு.

"வீட்லே கஷ்டம்டா. எடுக்க முடியலே!" பதிலளித்தான் சுந்தரம்.

அன்று சனிக்கிழமை வாரக் கூலியை வாங்கிக் கொண்டு "இன்னிக்கு அம்மாவை டவுசர் எடுத்துக் கொடுக்கச் சொல்லணும்" என்ற முடிவோடு வீட்டிற்குள் நுழைந்தான் சுந்தரம்.

"என்னம்மா படுத்துக் கிட்டிருக்கே... உடம்புக்கென்ன?"

"வாடா சுந்தரம். நீ போன பிறகு சுரம்டா. கை கால் வீங்கிப் போச்சு. எழுந்திருக்க முடியலே. காசு வாங்கியாந்தியா? 'ஆஸ்பத்திரி'க்குப் போகணும்" என்றாள் தாய்.


பக்கத்துத் தெருவிலிருந்த டாக்டர் ஒருவரிடம் அழைத்துப் போனான். ஊசி போட்டு மூணு வேளை மருந்து கொடுத்த டாக்டர், சீட்டும் எழுதிக் கொடுத்தார். சுந்தரம் அஞ்சு ரூபாயை எடுத்துக் டாக்டருக்கு 'பீஸ்' கொடுத்து விட்டு, அம்மாவை வீட்டுக்கு அனுப்பி விட்டு, டாக்டர் எழுதி கொடுத்த மருந்தை வாங்க கடைத் தெருவுக்கு புறப்பட்டான்.

'அந்த மருந்து விலை எவ்வளவு இருக்குமோ!' என்ற கவலை அவன் மனதைக் கவ்வியது. கூடவே, 'சே' இன்னிக்கு அம்மா கிட்டே சொல்லி 'டவுசர் எடுக்கணும்'னு இருந்தேன்... 'அம்மா உடம்புக்கு இப்படி சுரம் வந்து விட்டதே'...ஹூம்! 'டைலர் கடையில சொல்லி கிழிந்த டவுசரை ஒட்டுப் போட்டுக் கொண்டு தான் மறுபடி வேலைக்குப் போகணும்' என நினைத்தவாறே மருந்துக் கடை அருகில் போய் நின்றான் சுந்தரம்.

ந. க. துறைவன்

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

## மேனகாவின் மனோதைரியம்



இந்தியா ஒரு ஜன நாயக நாடாக இருப்பதால் அனாவசியமாய் அரசியல் கட்சிகள் தோன்றுவதைத் தவிர்க்கவியலாது. எனவே தான் போதிய அளவு மக்கள் பலம் இல்லாத 'LETTER HAED' கட்சிகள் ஏராளமாகத் தோன்றி வருகின்றன. இந்த 'லெட்டர் ஹெட்' கட்சிகளுள் தேசிய அளவிலான 'கட்சிகள், மாநில அளவிலான 'லெட்டர் ஹெட் கட்சிகள்' என்று இரண்டு வகைகளுண்டு. இத்தகைய கட்சிகளுள் 'ராஷ்ட்ரீய சஞ்சய் மன்ச்' என்ற கட்சி தேசிய அளவிலான அரசியல் கட்சிகளுள் முக்கிய மான தொன்றாகும். இந்தியாவில் எத்தனையோ காரணங் களுக்காக கட்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் மேனகா காந்தியின் தலைமையில் இயங்கி வரும் இந்தக் கட்சியோ ஒரு மாமியாருக்கும் மருமகளுக்கும் நடந்த குடும்பச் சண்டையினால் உருவான ஒரு கட்சியாகும். இந்த தேசிய கட்சிக்கு ஆந்திராவில் மூன்று எம்.எல்.ஏ.க்களும் உத்திரபிரதேசத்தில் ஒரு எம். எல். ஏ. வுமாகச் சேர்ந்து மொத்தம் நான்கு எம். எல். ஏக்கள் தான் இருந்தார்கள்.

ஆந்திராவில் என். டி. ஆருடன் கூட்டணி அமைத்ததின் பயனாகக்கிடைத்த மூன்று எம்.எல். ஏக்களில் பேடா பல்ளி தொகுதி எம். எல். ஏவான பிரகாச ராவ் என்பவரை ஊழல் புரிந்தார் என்பதற்காக தன் கட்சியை விட்டு நீக்கியிருக்கிறார் மேனகா. அது மட்டுமல்லாமல் தன் கட்சியின் மூலம் கிடைத்த எம். எல். ஏ. பதவியை ராஜினமா செய்யும் படியும் வற்புறுத்தியிருககிறார்.

கட்சிகள் எம். எல். ஏக்களை விலை கொடுத்து வாங்கும் இந்தக் காலத்தில் ஒரு மாநிலத்தில் தன் கட்சிக்கு இருக்கும் மூன்றே எம். எல். ஏக்களில், ஒருவரை ஊழல் புரிந்தார் என்பதற்காக அவரை கட்சியிலிருந்து வெளியேற்றியிருப்பது பாராட்டுக்குரியதே! மேனகாவின் இந்த மனோதைரியம் மற்ற கட்சியினருக்கும் இருந்தால் ஊழல் புரிபவர்களை அவ்வப்போது வெளியேற்றுவதின் மூலம் நம் தேசத்தில் ஊழலை ஒழிக்கலாமே!

—ஜி. மாதவராஜன்

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

அனுபவக் கட்டுரைப் போட்டி

# நியாயம் கேட்டேன்

2-வது பரிசு

அனுப்புநர் :
முகவரி : 2266 பட்கோசாமி வட்டாரம், மானோசியப்பா வீதி
தஞ்சாவூர்-613 009.

நான் 1981-82 ஆம் ஆண்டு முது நிலை ஆராய்ச்சியாளனாக (Post-Doctoral Research Fellow) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் விலங்கியில் துறையில் இருந்த போது என்னுடைய ஆராய்ச்சி புதுமைகளை ஆராய்ச்சிக் கட்டுரைகளாக்கி வெளி நாட்டு இதழ்களுக்கு (Journal) அடிக்கடி அனுப்புவது வழக்கம். இது போல ஒரு முறை இங்கிலாந்திலிருந்து வெளி வருகின்ற ஒரு ஆராய்ச்சி இதழுக்கு ஒரு கட்டுரையின் நகல்களைப் பதிவு நூல் அஞ்சல் மூலம் அவசரமாக அனுப்ப அண்ணாமலைப் பல்கலைக் கழக வளாகத்திலுள்ள பட்டுவாடா அஞ்சலகத்திற்கு (Delivery office) சென்றேன். அங்குள்ள அஞ்சல் பதிவாளரிடம் என்னுடைய பதிவு நூல் அஞ்சலைக் கொடுத்து எவ்வளவு தபால் தலைகள் ஒட்ட வேண்டுமென்று கேட்டேன். அதற்கு அவர் 250 கிராம் எடையுள்ளதாகவும் 23.30 ரூபாய் தபால் தலை ஒட்ட வேண்டுமென்றும் கூறினார். அதிக அளவிற்கு ஒட்டச் சொல்கின்றீர்களே என்று முன் அனுபவத்தால் கேட்டேன். அதற்கு அவர் நான் சொல்கின்ற தொகைக்குத் தபால் தலை ஒட்டினால் பதிவு செய்வேன் இல்லையென்றால் நீங்களே எடுத்துக் கொண்டு செல்லலாமென்று கடுமையாக கூறி விட்டார். எனவே, அதை அங்கு அஞ்சல் செய்யாமல் அதே வளாகத்திலுள்ள மற்றொரு அஞ்சலகத்தில் கொடுத்து அதே போன்று எவ்வளவு தபால் தலை ஒட்ட வேண்டுமென்று கேட்டேன். அதற்கு அங்குள்ளவரும் 250 கிராம் இருப்பதாகவும் ஆனால் 27.05 ரூபாய் தபால் தலை ஒட்ட வேண்டுமென்றும் கூறினார்.

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

அடுத்து சிதம்பரம் RMS-இல் அனுப்பலாமென்று கருதி அங்கு சென்று கேட்டதற்கு 280 கிராம் இருக்கின்றது என்று சொல்லி ரூபாய் 24.90 கேட்டார். அதற்கு நான் சம்மதிக்காது அஞ்சல் செய்யாமல் எடுத்து வந்து விட்டேன். அடுத்த நாள் மற்றொரு அஞ்சலகத்தில் வேலை செய்கின்ற என் நண்பர் ஒருவரிடம் இது குறித்து விசாரித்த போது அதற்குரிய சரியான கட்டணத்தை (ரூபாய் 19.15) அஞ்சல் கட்டணப் புத்தகத்திலிருந்து பார்த்து தெரிவித்தார். அதன் பிறகு அந்த உறையை (Cover) எடுத்துக் கொண்டு வேறு அதே எடையுள்ள உறையில் ஆராய்ச்சிக் கட்டுரையின் நகல்களை வைத்து 3 நாள் கால தாமதத்துடன் அனுப்பி வைத்து விட்டு இது குறித்து பொதுத் தபால் மேற்பார்வையாளர். (Post Master General), கடலூர், அவர்களுக்குத் தெரிவித்து கடிதம் எழுதினேன்.

அடுத்த சில நாட்களில் என்னுடைய புகார் கடிதத்தை எடுத்துக் கொண்டு ஒரு அஞ்சல் ஆய்வாளர் (Postal investigation officer) என்னை வந்து சந்தித்து நடந்தவைகளைக் கேட்டார். அதற்கான சான்றுகள் என்ன இருக்கின்றது என்று கேட்டார். நான் எடுத்து வைத்திருந்த கட்டண விபரம் குறித்து உறையை கொடுத்தேன். அதைப் பெற்றுக் கொண்டு என்னையும் அழைத்துக் கொண்டு புகாரில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு அஞ்சலகத்திற்கும் சென்று விசாரணை நடத்தினார். முடிவில் நடந்த தவறுகளுக்குப் பொது மக்கள் நலன் கருதி அஞ்சல் துறை சார்பாக மேற்படி அஞ்சல் ஆய்வாளர் மன்னிப்பு கோரி, இது போன்ற தவறுகள் இனி நடக்காது என்று உறுதி கூறி என்னைத் தொடர்ந்து இது போன்ற பொதுத் தொண்டில் பங்கு கொள்ள வேண்டுமென்ற அவாவை வெளிப் படுத்தி பாராட்டும் நன்றியும் தெரிவித்துச் சென்றார். மேலும் நான் தெரிவித்திருந்த யோசனைகளான சரியான எடை காட்டும் கருவிகளை (weight balance) வைத்தல், கட்டண விபரம் குறித்த புத்தகங்களை பொது மக்களின் உபயோகத்திற்காக அஞ்சலகங்களில் வைத்தல் மற்றும் அஞ்சல் கட்டண விகிதத்தை சரியாக பார்த்து சொல்லும் பணியாளரை வேலையில்

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

சுட்டி ஒவ்வொரு மாதமும் **முதல் தேதி** வெளிவரும்.
12 இதழ்கள் அஞ்சலில் பெற சந்தா ரூ 5-00
தனிப்பிரதி 50 காசு
எல்லாத் தொடர்புகளுக்கும் :—

ஆசிரியர் குழு, '**சுட்டி**'
1494, அண்ணா நகர், சென்னை-600 040.

**சுட்டி முன் இதழ்கள் வேண்டுமா?** இதழ் எண்கள் 1 முதல் 9, 21, 22, தவிர பிற இதழ்கள் அனைத்தும் கிடைக்கும். பெற விரும்புவோர் இதழுக்கு 25 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M.O.) அனுப்பினால், எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

**சுட்டியை இலவசமாக அறிமுகப்படுத்துங்கள்:** நீங்கள் பெற்ற பயனை உங்கள் நண்பர்களும் பெறட்டுமே! சுட்டியை வரவேற்கக்கூடியவர் என்று நீங்கள் நினைக்கும் நண்பர்களின் முகவரியை அனுப்புங்கள். எவ்வளவு முகவரி அனுப்பவும் தடையில்லை. முற்றிலும் இலவசமாக மாதிரி இதழ் ஒன்று அவர்களுக்கு அனுப்பப்படும்.

**சுட்டி விற்பனையாளர்கள் :—** சுட்டி விற்பனையாகாத எல்லா நகரங்களிலும், ஊர்களிலும், கிராமங்களிலும் தேவை. எளிய விதிமுறைகள், தரமான கமிஷன். சுட்டியின் கொள்கைகளில் ஆர்வம் கொண்ட வாசகர்களுக்கு முன்னுரிமை உண்டு.

[redacted]

அமர்த்தல் போன்றவற்றை அமுல் படுத்தியதால் தற்போது அண்ணாமலைப் பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள அஞ்சலகங்களால் மாணவர்களுக்கோ, ஆராய்ச்சியாளருக்கோ, ஆசிரியர்களுக்கோ மற்றும் பொது மக்களுக்கோ இது போன்ற இடர்பாடுகள் ஏற்படுவதில்லை என்பதை எண்ணும் போது உள்ளம் பூரிப்படைகின்றது.

—டாக்டர் வி. இரா. பக்தவச்சலம், M.Sc. Ph.D.

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

[எமக்கு அனுப்பப்பட்ட அத்தனை நூல்களுக்கும், பத்திரிகைகளுக்கும் நன்றி. தனிப்பட்ட சாதி, மத, கட்சி இதழ்கள்/நூல்கள் தவிர ஏனையவை மட்டுமே இப்பகுதியில் இடம் பெறும்.]

__அருளும் பொருளும்__ : (சிறுகதைத் தொகுப்பு)
ஆசிரியர்: பூவை. சொ. அண்ணாமலை, 'கைவிளக்கு' மாத ஏடு பூதப்பாண்டி, கன்னியாகுமரி மாவட்டம். விலை ரூ. 2.50

__ஆசிரியர் கூட்டணி__ : (தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி இதழ்) ஆசிரியர்: சு. ஈசுவரன், 158, பெல்சு சாலை, சென்னை-5, தனியிதழ் விலை போடவில்லை.

__பல்லாங்குழி__ : (திராவிட—ஆப்பிரிக்க ஒப்பீடு)
ஆசிரியர்: டாக்டர் ப. தாயம்மாள் அறவாணன், கிடைக்குமிடம்; பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை-600001. விலை ரூ. 12

__மதுரை கூட்டுறவு__ : (மாத இதழ்) ஆசிரியர்: ஆர். ஆழ்வார், B.A தனி அதிகாரி, மதுரை மாவட்ட கூட்டுறவு ஒன்றியம், 187. வடக்கு வெளி வீதி: மதுரை-625001. ஆண்டு சந்தா ரூ 15
தனிப்பிரதி விலை ரூ 1.25

__தமிழ் இலக்கியங்களின் காலம் பற்றி வையாபுரியாரின் கணிப்பு__ : அ. கா. பெருமாள், விற்பனை உரிமை: க்ரியா, 268, ராயபேட்டை ஹைரோடு, சென்னை-600014. விலை ரூ 6.00

__அக்னி ஸ்வரங்கள்__ : (கிராமிய பாடல் தொகுப்பு)
கே. ஏ. குணசேகரன், வெளியீடு: இராதா பதிப்பகம், கமலபவனம், திருவள்ளுவ நகர் முதல் வீதி, புதுக்கோட்டை-622001.
விலை ரூ 5.00

---

உங்கள் பிரச்சனைகள் எதுவாக இருப்பினும் எங்களுக்கு எழுதுங்கள். விரிவான ஆலோசனைகளை ஒரு வாரத்திற்குள் அனுப்பிவைக்கிறோம். அஞ்சல் செலவு மற்றும் ஆலோசனை கட்டணமாக உங்களால் இயன்ற தொகையினை தவறாது அனுப்பி வையுங்கள். முகவரி திருமதி எம். மைதிலி, 27-பி. திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர், சென்னை-600053.

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

**மீண்டும் ஒரு**

# சுதேச இயக்கம்



இந்தியரின் வெளி நாட்டு மோகம் அனைவரும் அறிந்தது தான் எனினும், சமீப காலமாக இது உச்ச கட்டத்தை அடைந்து வருகிறது.

நடுத்தர மற்றும் பணக்கார மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களிலிருந்து அதி ஆடம்பரப் பொருட்கள் வரை அனைத்தும் வெளி நாட்டு பொருட்களாகவே உபயோகப் படுத்தப் படுகின்றன. கிட்டத் தட்ட இந்தியாவின் எல்லா முக்கிய நகரங்களிலுமுள்ள பர்மா பஜார், சைனா பஜார் போன்ற மார்க்கெட்டுகளில் வெளி நாட்டுப் பொருட்களை வாரிக் கொண்டு வந்து விற்கின்றனர். துணி வகைகளில் சில ரகங்கள் இந்திய உற்பத்திகளை விட, விலை மலிவாகக் கிடைப்பதால் பலரும் அவற்றை விரும்பி வாங்குகின்றனர். இவற்றின் எதிர் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதைக் கணக்கிட்டால் தேச நலனில் அக்கறையுள்ள எவரும் அச்சப்படவே செய்வர்.

ஏற்கனவே நமது நாட்டில் உற்பத்திச் சுணக்கமும், தொழில் முடக்கமும் மிக அதிக அளவில் பாதித்திருக்கும் போது, வெளி நாட்டுப் பொருட்களின் அதீத விற்பனை உள் நாட்டுப் பொருட்களின் விற்பனையை வெகுவாகப் பாதிக்கும் என்பது நாம் அறியாததா? விற்பனைக் குறைவு—உற்பத்தி முடக்கத்தையும், உற்பத்தி முடக்கம்—தொழிலாளர் நலனுக்குக் கெடுதலையும் விளைவித்து, நாளடைவில் ஆட் குறைப்பு, வேலையின்மை போன்ற பிரச்சனைகளை உருவாக்காதா?

இந்த சூழ்நிலை இந்தியா போன்ற எந்த ஒரு வளரும் நாட்டுக்கும் உகந்ததல்ல. பொருளாதாரச் சிக்கலில் அமிழ்ந்து கிடக்கும் இந்தியா மேலும் தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளும் அவல நிலையை இந்த அந்நிய மோகம் உண்டாக்கி வருகிறது.

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

## திருப்பூரில் வீடியோ விபச்சாரம்

இந்தியாவிலுள்ள முக்கியமான தொழில் நகரங்களில் கோவை மாவட்டத்தின் திருப்பூரும் ஒன்று. இங்குள்ள பனியன் தொழிலில் ஆண், பெண் தொழிலாளர்கள் அதிக அளவில் பணி புரிகின்றனர். பஞ்சு மார்க்கெட், கதர் போன்றவற்றாலும் பெயர் பெற்றது இந்நகர். சமீப காலமாக இந்தியாவிலுள்ள பெரிய நகரங்களில் பிடித்து வருகிற 'வீடியோ நோய்' திருப்பூரையும் சில நாட்களாக அதிகமாக பிடித்துக் கொண்டிருக்கிறது.

கலாச்சார ரீதியாக மனித மனங்களை அரித்து, சரியான சிந்தனைப் பாதைக்குத் தீங்கு விளைவிக்கிற திரைப் படங்கள்... அவற்றைத் திரையிடும் தியேட்டர்கள் வீதியெங்கும் பெருகிப் போன இந் நகரில், இப்போது எங்கு பார்த்தாலும் 'வீடியோ கிளப்'கள் முளைத்திருக்கின்றன. ▶

---

அரசு அலுவலகங்களில் எழுத்துப் பணியில் இருப்பவர்கள் பயன்படுத்தும் பேனாக்களில் பாதிக்கு மேல் வெளிநாட்டுத் தயாரிப்புகளான HERO, RED LEAF போன்றவைகளாகவே இருக்கின்றன. இதனால் உள்நாட்டுப் பேனா உற்பத்தி பாதிக்கப் படுகிறது

இப்படி அந்நிய மோகம் கொண்டு அலைவதிலிருந்து விடுபட மக்களும். அந்நியப் பொருட்களை விற்பனை செய்வதைத் தடை செய்ய அரசும் முன் வர வேண்டும். இதைத் தடுத்து நிறுத்த வேண்டிய அரசாங்கம் ஏன் இப்படி மெத்தனமாக நடந்து கொள்கிறது?

உள்நாட்டு உற்பத்தி பெருகி வேலையின்மை குறைய வேண்டுமானால் தேச நலனில் அக்கறையுள்ள மக்கள், மீண்டும் ஒரு சுதேசி இயக்கம்' நடத்த தயாராக இருக்க வேண்டும்.

—"அக்னி [illegible]"

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

ஆளுங்கட்சிப் புள்ளிகளும், பஞ்சு மார்க்கெட்டில் கொள்ளை லாபம் அடிக்கிற கமிஷன் ஏஜெண்டுகளும் இப்போது இந்த வியாபாரத்தை வெகு விமரிசையாகச் செய்து வருகின்றனர். உறுப்பினர் கட்டணம் என்று ஒரு ரூபாயும், ஒரு மணி நேர அல்லது ஒன்றரை மணி நேர வீடியோ சினிமாவிற்கு மூன்று ரூபாயும் வசூலிக்கின்றனர். இதற்கு சில வியாபாரக் கிடங்குகளே கூடங்களாக ஆக்கப் பட்டுள்ளன. சுமார் 200 பேர்களிலிருந்து 500 பேர்கள் வரை அமர வசதி செய்து அப்பட்டமான நிர்வாண உடலுறவுப் படங்களைக் காட்டுகின்றனர். இம்மாதிரிப் படங்களைக் காட்டி கொள்ளை லாபம் அடிக்கிற இந்தக் குட்டி முதலாளி கள் நாள் தோறும் பணத்தை வாரிச் சுருட்டுகின்றனர். சமீபத்தில் கோவை பதிப்பு நாளிதழ்கள் 'திருப்பூரில் ஆபாச சினிமா பறி முதல்... கைது...' என்று செய்திகள் வெளியிட்டன. தொடர்ந்து உடலுறவுப் படங்களைக் காட்டி இவர்கள் காவல் துறையின் கண்களில் பட்டனர். ஆனால் ஒரு வார இடை வெளிக்குப் பின் ஆளுங் கட்சி நபர்களால் மீண்டும் இந்த ஆபாசப் படங்கள் தொடர்ந்து திரையிடப் படுகின்றன. காவல் துறை தூங்கு கிறதா... நடிக்கிறதா?

இந்த வீடியோ விபச்சாரக் கூடங்களில் பங்கு தாரர் களின் (பள்ளிக் கூடம் படிக்கிற) மகன்களே கட்டணம் வசூலிக்கின்றனர். மூன்று ரூபாய் வாங்குவதற்கு எவ்வித ரசீதும் கிடையாது. நிலைமை இப்படியே போனால் இந்த வீடியோ குட்டி முதலாளிகள் இனி வீதிகள் தோறும் விபச் சார விடுதிகளைத் திறந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

1972-1973 வாக்கில் இந் நகரில் பல நிர்வாண 'ரெக் கார்டு டான்ஸ்'கள் நடந்த போது ஊர்வலமாகச் சென்று அவர்களை அடித்து நொறுக்கி அப்புறப் படுத்திய கம்யூனிச இயக்கத் தோழர்கள் இப்போது மௌனமாக இருப்பது ஏன்?

'விபச்சாரச் சட்டத்தின் கீழ் ஆண்களையும் கைது செய்வேன்' என்று கொக்கரிக்கிற எம். ஜி. ஆர் இவைகளை முதலில் ஒழிக்க முன் வருவாரா? கலையும் கலாச்சாரமும் ஆட்சியாளர்களால் இங்கே தினந்தோறும் கற்பழிக்கப் படுகின்றன...

—கு. கிருஷ்ணமூர்த்தி

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

# ஜாதிகளுக்கு அமைச்சர் பதவியா?

தாழ்த்தப்பட்டோர், ஆதி வாசிகள் ஆகியோருக்கு கல்வி முதலியவற்றில் சாதி அடிப்படையில் ஒதுக்கீடுகள் செய்வது ஓரளவு சரியே! ஆனால், மந்திரி பதவியும் சாதி அடிப்படையில் கொடுக்கப் படுவதாகச் சாதி வெறியர்கள் விளம்பரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இது குறித்து தமிழக அரசு விளக்கம் அளிக்குமா?

அண்மையில், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. விஜயலக்ஷ்மிக்கு அமைச்சர் பதவி அளிக்கப் பட்டதை அடுத்து, வன்னிய சங்கத்தினர் தமிழ் நாடு முதலமைச்சருக்கு நன்றி செலுத்தி, பாராட்டு தெரிவித்துள்ளனர். '36 ஆண்டுகளாகியும் வன்னியர் எவருக்கும் இதுவரை அமைச்சர் பதவி கொடுக்கப் படவில்லை. அந்தக் குறை இப்போது நீங்கி விட்டது' என்று பத்திரிகைகளில் பலரும் அறிய விளம்பரம் செய்து தங்கள் நன்றிக் கடனைத் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஜூலை 1 ஆம் தேதி திரு. எஸ். ஆர். ராதா அமைச்சராக பதவி ஏற்றதை, அவரது இனத்தைச் சேர்ந்த மக்கள், "சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகள் ஆகியும் அமைச்சர் பதவி பெறாதிருந்த எங்கள் சமூகத்திற்குப் பெரிய பெருமை தந்து விட்டார்" என்று நன்றி செலுத்தியிருக்கிறார்கள்.

முதலமைச்சர் சாதி வாரியாக மக்களைத் திருப்திப் படுத்த அமைச்சர் பதவி கொடுத்து வருகிறாரா? ஒவ்வொரு சாதியைச் சேர்ந்த ஒருவருக்கு ஒரு பதவி கிடைப்பது ஆச்சரியமில்லை! திறமையைப் பார்த்துக் கொடுத்திருப்பது தான் உண்மையில் நடந்திருக்க வேண்டும். அப்படி இருக்க 'ஏதோ சாதி வாரியாக பிரதி நிதித்துவம் இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் அமைச்சர் பதவியெல்லாம் கொடுத்ததாகச் சாதிப் பித்தர்கள் விளம்பரம் செய்து கொள்கிறார்களே!' இவர்களுக்கு அரசாங்கம் உண்மையை விளக்கிக் கூறி தெளிவு படுத்துமா? இல்லை, உண்மையே அது தானா?

—'க...'

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

**ஆங்கிலம் போல் தமிழ் உலக மொழி (International language) ஆவதற்குத் தாங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?**

ஆங்கிலம் போல் உலக மொழியாக ஆக முடியாது; ஆக வேண்டியது மில்லை. காரணம், ஆங்கிலத் தனியரசாண்மையே ஆங்கிலத்தை உலக மொழியாக்கியது. அத்தகைய தனியரசாண்மைக்கு எதிர்காலமில்லை; இருக்கவும் கூடாது.

*அண்மையில் கல்வி அமைச்சர் அவர்களுடன் வெளி நாடுகளுக்குச் சென்று வந்த தங்கள் பட்டறிவுகளைக் கூறுங்கள்.*

...சீனாவின் பழமைக்குக் கிடைக்கும் சான்றுகளில் பத்தில் ஒரு பகுதி கூடத் தமிழின் தொன்மைக்கு இல்லை எனலாம். அவ்வாறே சீன இலக்கியப் பரப்பிலும் பத்தில் ஒரு பகுதி கூடத் தமிழுக்கு இல்லை. இது



**சென்னைப் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர்**

# டாக்டர். ந. சஞ்சீவி

**பதிலளிக்கிறார்**

நம் முன்னோர்களின் முயற்சி இன்மையை நமக்கு எடுத்துக் காட்டும். இடித்துக் காட்டும். இப்படிச் சொல்வதால் சீனத்தை விட செந்தமிழுக்கு உள்ள சில சிறப்புகளை எடுத்துக் காட்டாகத் தொல் காப்பியம், தொகை நூல்கள், திருக்குறள், இரட்டைக் காப்பியங்கள் போன்றவற்றின் சிறப்புகளைக் குறைத்து மதிப்பிடுவதாகக் கருதுதல் கூடாது. இவை உலக இலக்கியங்களிலேயே ஒப்பு உயர்வு அற்றவை. ஆனாலும் நம்முடைய குறைபாடுகளையும் உணர்ந்து கொள்வதால் தான் உலகில் மேலும் உயர்வு பெற முடியும்.

*பிற நாடுகளில் தமிழ் ஒரு மொழி என்ற அளவில் பயிலப் படுகிறதேயன்றி இலக்கியத்துக்காகப் பயிலப் படுவதில்லை என்று பலரும் கூறுவதுப் பற்றித் தங்கள் கருத்து என்ன?*

இது உண்மை தான்.

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

"ரங்கா டைப் பௌண்ட்ரி"

- போஸ்டர் அச்செழுத்துக்கள்.
- எல்லா வித, எல்லா மொழி ஈய எழுத்துக்கள்.
- அச்சக உபகரணங்கள்.
- புது அச்சகம் தொடங்க நாணயமான வழிகாட்டுபவர்கள்.

அலுவலகம்: 78, ஹண்டர்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை-112.
தொழிலகம்: 38, குட்டி செட்டி தெரு, பெருமாள்பேட்டை, சென்னை-7.
தொலை பேசி: 37999; 664293

**கட்டியில் மலிவு-வரி விளம்பரம்:** கட்டியில் 3 வரிகளுக்குள் (சுமார் 15 வார்த்தைகள்) அடங்குமாறு உங்கள் செய்தியை வெளியிடுவதற்குக் கட்டணம் ரூ. 15/- மேற்கொண்டு வரியொன்றிற்கு ரூ. 5/- மட்டுமே.

---

**தனித்தமிழ் இயக்கம் பற்றிய தங்கள் கொள்கை யாது?**

எனக்கு முழு உடன்பாடான ஓர் இயக்கம் அது. தனித் தமிழ் என்பது என்னைப் பொறுத்தவரை பழகு தமிழேயாகும்.

**வேண்டுமென்றே வட சொல் கலந்து எழுதுபவர்களைப் பற்றி உங்கள் கருத்து என்ன?**

வேண்டுமென்றே வட ஒலிகளை வாழ்விப்பவர்கள் திட்டமிட்டோ, அல்லது அறியாமையினாலோ தமிழைச் சாகடிப்பவர்கள்.

**போர் முறைகள் மாறி விட்ட இக்காலத்தில் தமிழில் உள்ள போர் பற்றிய இலக்கியங்கள் காலத்திற்கு ஒவ்வாதவை என்று ஒதுக்கப் படுவதற்கு இடம் ஏற்படுமா?**

ஏற்படும், சரிதான்.

**உங்கள் எதிர்காலத் திட்டங்கள் என்ன?**

பொதுவுடைமைச் சமுதாயம் அமையப் பாடு படுவது தான் காரணம்: இச்சமுதாயம் அமைந்தால் தான் தமிழும் தமிழரும் உயர்வர். சாதிகள் சாய்ந்து நீதிகள், நியாயங்கள், தகுதிகள், திறமைகள் தலை நிமிரும்! —நன்றி: "குறளியம்"

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

Trade Mark Registratrion No. 273770 B

Tel : LEOCOFFEE

**For Purity & Quality**

# LEO COFFEE

Administrative Office :

**No. 16, South Mada Street,**

**MYLAPORE, MADRAS-600 004.**

*Phone : 76557 & 76912*

ADVT.

## BRANCHES

| | | | |
|---|---|---|---|
| Mylapore | 76912 | Saidapet | 440159 |
| T.Nager | 446977 | Ayanavaram | 663486 |
| Zambazaar | 843377 | George Town | 34276 |
| Triplicane | 841177 | Perambur | 647162 |
| Washerman pet | 554117 | Adyar | 414037 |
| Purasa walkam | 665164 | Nungam bakkam | 811137 |
| Aminjikarai | 612422 | N.S.C. Bose Road | 21223 |
| Tambaram | 48557 | | |


FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

## சுட்டியார் பதில்

**இன்றைய எழுத்தாளர்களின் முக்கிய நோக்கம் என்ன?**

—சுஜாதாப்பிரியன், கோவை

பெரும்பாலான எழுத்தாளர்களுக்கு முக்கிய நோக்கம் வியாபாரம்.

**கே. எல். ராவின் 'கங்கை—காவிரி' இணைப்புத்திட்டத்தை யாரும் நினைப்பதே இல்லையே ஏன்?**

—பி. சின்னக்கண்ணன், கோட்டூர்

முதலில் கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வரட்டும்!

**மாநில சுயாட்சியைப் பற்றி தங்கள் கருத்து?-**

—R. புவனேந்திரன், திருவொற்றியூர்

மத்திய அரசை எதிர்க்க சில மாநிலக் கட்சிகளுக்குக் கிடைத்த ஆயுதம்.

**ஒருவனது ஏழ்மை அவனது முன்னேற்றத்துக்கு தடையாக இருக்குமா!**

—எஸ். மோகன், மேற்குமாம்பலம்

முன்னேற முயற்சிப்பவனுக்கு ஏழ்மை ஒரு தடையல்ல!

**பொருளாதார ரீதியில் நம் தேசம் உருப்பட ஏதாவது ஒரு வழி!**

—S. கல்யாணசுந்தரம், சேலம்

திட்டங்கள் தீட்டுவதுடன் நின்றுவிடாமல் அவற்றை ஒழுங்காக செயல் படுத்தவும் வேண்டும்.

[redacted] கரி,

டீசலால ஓடக் கூடிய ஏராளமான ரயில் பாதைகளை மின்சார மயமாக்க வேண்டிய அவசியமென்ன? அது மட்டுமா? அண்மையில் டில்லியில் உள்ள ரெயில் பவனில் மதிப்பீடு ஒன்று வெளியாகி உள்ளது. "ரெயில்வே நிர்வாகத்திற்கு நாள் ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் நஷ்டம்" என்று.

வருவாய்க்கு ஏற்ற திட்டங்களைச் சரிவர தீட்டிச் செயல் படுத்தாமல் புதிய புதிய திட்டங்களைப் போட்டுக் கொண்டிருக்கும் இவர்களால் வறுமையை எப்படி ஒழிக்க முடியும்?

—"சுட்டி பாரதி"

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

# நஷ்டம்!... நஷ்டம்!

இந்திய நாட்டின் வளர்ச்சிக்காக ரூபாய் 5000 கோடி கடன் வாங்கி, அதை விவஸ்தை இல்லாமல் செலவு செய்து கொண்டிருக்கிறது இந்திய அரசு.

ஏற்கனவே பாதி பணத்தை ஏசியாட் விளையாட்டிற்காகச் செலவு செய்து விட்டு, கோஷ்டி சேரா நாடுகளின் உச்ச மாநாட்டிற்காக கணிசமான தொகையைக் கரைத்து விட்டு மீதி ஏதோ கொஞ்சம் பணம் இந்திய அரசின் உண்டியலில் இருக்கும் போல் தெரிகிறது. அதையும் அவசரத் தேவையில்லாத திட்டங்களுக்கு செலவிட்டு விணடிக்கப் போகிறது நம் இந்திய அரசு.

மக்களிடம் பசி, பட்டினி, வறுமை, அறியாமை இவைகளெல்லாம் நிரந்தரமாக அப்படியே மண்டிக் கிடக்கும் போது 'நாட்டு வளர்ச்சிக்கு' என்று கையேந்தி வாங்கிய பணம் எப்படியெல்லாம் பாழாகிறது? போதாக் குறைக்கு இந்திய அரசின் நிர்வாகத் திறன் அசட்டையின் காரணமாக மேலும் பல கோடிகள் பாழாகிக் கொண்டிருக்கிறது.

தேசிய உடமையாக்கப்பட்ட வங்கிகளில் கொள்ளையடிக்கப் பட்டதால் இழந்த தொகை பல கோடி.

'நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்பொரேஷன்', நலிந்த பஞ்சாலைகளை எடுத்து நடத்தி, அதுவும் நலிந்து போனதால் ஏற்பட்ட நஷ்டம் பல கோடி.

இந்நிலையில் அண்மையில் வந்த பத்திரிகைச் செய்தி நமக்கு மேலும் கவலையளிக்கிறது. 1990-ஆம் ஆண்டிற்குள் 12800 ரெயில் பாதைகளை மின்சார ரயில் பாதைகளாக மாற்றப் போகிறார்களாம். செலவு ரூ. 1200 கோடி. இது நியாயமான செலவல்ல என்று தான் நாம் எச்சரிக்கிறோம். தொடக்க நிலைச் செலவு ஒரு பக்கம் இருக்கட்டும். ஏற்கனவே மின் தொடர் கொடுத்த வீடுகளுக்கே சரியாக மின்சாரம் வழங்கப் படவில்லை. தொழிற்சாலைகளுக்குச் சீரான மின் வழங்கீடு இல்லாததால் பல தொழிற்சாலைகள் பூட்டிக் கிடக்கின்றன. நிலமை இப்படி இருக்கும் போது, ◀


FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

● தினசரிகளில் 'தற்கொலை'ச் செய்திகள் இடம் பெறாத இதழ்களே இல்லை எனலாம். அல்லது ஒரு பத்திரிகையில் தற்கொலைச் செய்திகள் இடம் பெறாத பக்கங்களே இல்லை எனலாம். அறியாமையும், வறுமையும், கசப்பான அனுபவங்களும், நொந்து போன மனநிலையும் ஒருவரை தற்கொலை முயற்சிக்குத் தூண்டுகின்றன.

சிலர் மருந்து என நினைத்து தவறாக ஏதாவது (POISON) விஷத்தைக் குடித்து விடுவதும் உண்டு. சிலர் விஷம் தான் என்று உறுதி செய்து கொண்டு உட்கொள்வதும் உண்டு. இவர்கள் படும் அவஸ்தையை விட இவர்களைச் சார்ந்தவர்கள் படும் அவஸ்தையே பரிதாபமானது. நகரங்கள் அல்லது நகர்புறங்களில் வசிப்பவர்கள் அருகாமையிலுள்ள மருத்துவ மனைக்கோ, தனியார் மருத்துவ மனைக்கோ அல்லது டிஸ்பென்சரி வைத்திருக்கும் மருத்துவரிடமோ அழைத்துச் சென்று உயிரைக் காப்பாற்ற வாய்ப்புண்டு. கிராமப் புறங்களில் வசிக்கும் மக்கள் இம்மாதிரிச் சம்பவங்களில் ஓர் உயிரை இழப்பதே சாத்தியமாகிறது.

ஒரு நபர் விஷத்தைக் குடித்து விட்டார் என்று அறிந்தவுடன் நாம் செய்ய வேண்டியது: இரண்டு கோழி முட்டைகளை உடைத்து அதன் வெள்ளைக் கருவை மட்டும் தனியே எடுத்து ஒரு பாத்திரத்தில் ஒரு டம்ளர் அளவு பசும் பாலையோ அல்லது எருமைப் பாலையோ அதில் விட்டு நன்றாகக் கலந்து குடிக்கக் கொடுத்து விட வேண்டும். இந்த வேலையை உடனே செய்தாக வேண்டும். விஷம் ரத்தத்தில் கலந்து மயக்கம் ஏற்படுமுன் இதைக் கொடுத்து விட்டால் எந்த விஷத்தைச் சாப்பிட்டிருந்தாலும் அது உடனே முறிந்து விஷம் சாப்பிட்டிருந்த நபர் பிழைத்துக் கொள்ள வாய்ப்புண்டு.

—சோ துகுடியான



டெலிவிஷனில்
மிகச் சிறந்தது

சாலிடேர்

அதன் ஏஜெண்ட்ஸ்:

ZENITH ELECTRONICS

(கபாலீஸ்வரர் பெரிய கோபுர வாசல்)

மைலாப்பூர், சென்னை-4,

மிக நம்பகமானவர்கள்.


DIAL 76676, MADRAS.

ஆசிரியர்: நிர்மலா சுந்தர், வெளியிடுபவர்: பொ, இரத்தினம்,
1494, அண்ணா நகர், சென்னை-40. அச்சிடுவோர்:
J. S. கிட்ராஜ் ஷா, இருஷா பிரிண்டர்ஸ், 35, லப்பைத் தெரு,
சென்னை-600002.

FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011

ட்டு: வரத் தேதி 1, செப். 1983 Regd. No. TN/MS(N)/317
icensed to post without prepayment Licence No. TN/MS(N)

http://www.thamizham.net FREE E - BOOKS (TAMIL) தமிழ்நூலகம்





# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 48 tonnes from 28 tonnes o earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distribut ng over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development pro grammes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Techno logy promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.


FREE E BOOKS - www.thamizham.net - TM2446 / March 2011